**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**MCOP 36/2024**

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ஆம் நாள் புதன்கிழமை

ம.சா.2 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு. எஸ்.முத்துராமன்,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | திருக்குமரன் | த/பெ.: | நாகு |
| கிராமம்: | காசாங்குளம் | தாலுக்கா: | மன்னார்குடி |
| மதம்: | இந்து | தொழில்: | |
| வயது: | 55 | முகவரி: | மருதூர் ரோடு, காசாங்குளம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 13.08.2025

**முதல் விசாரணை** :-

நான் மனுவில் மனுதாரர் தரப்பு 2 வது சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பு சான்று ஆவணமாக எதுவும் தாக்கல் செய்யவில்லை.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் காவல் நிலையத்தில் விபத்து சம்பந்தமாக புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்தானது 24.12.2023 மாலை சுமார் 4.30 மணியளவில் நடந்தது. விபத்து ஏற்படுத்திய பேருந்து எண் TN 50 6066 ஆகும். நான் மேற்படி பேருந்தில் பயணம் செய்ததற்கான பயணசீட்டு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு பின் பேருந்து நின்றபின்பு தான் விபத்தை பற்றி நான் தெரிந்துகொண்டேன் என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க மனுதாரருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்தார் இந்த விபத்து தொடர்பாக என்னிடம் எந்த விசாரணையும் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்தவர் என் உறவினரா என்றால் இல்லை.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஓம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.